எம்..சி எண்.4/2022    நாள்: 27.02.2024

எ.ம.சா.1 பரமசிவம்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:</u>**

**1.** நானும், 1ம் மனுதாரரும் காதல் திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். நான் என்ன வேலை பார்த்துவருகிறேன் என்றால் சென்ட்ரிங் வேலை பார்த்து வருகிறேன். நான் எதிர் உரையில் குறிப்பிட்டுள்ள பெரியசாமி மற்றும் சோலைராஜன் இருவரும் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். நான் எனது அப்பா, அம்மா மற்றும் எனது குடும்பம் தம்பியுடன் கூட்டுக்குடும்பமாக வசித்தேன் என்றால் நானும், 1ம் மனுதாரரும் தனியாக தான் வசித்தோம். எனக்கும் 1ம் மனுதாரருக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்த பின்னர் தான் பிரச்சனை வந்தது என்றால் சரிதான். நான் 1ம் மனுதாரரை கூட்டிக்கொண்டு வழக்கறிஞர் முன்னிலையில் திருமண முறிவு ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

2. ம.சா.ஆ.2 ஆனது 15.12.2018ம் தேதி எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எழுதப்பட்ட பின்னர் 1ம் மனுதாரர் அவரது அம்மா வீட்டில் தான் வசித்துவருகிறார் என்றால் சரிதான். இரண்டு மற்றும் மூன்றாம் மனுதாரர்களை 1ம் மனுதாரர் படிக்கவைத்துவருகிறார் என்றால் சரிதான். நான் 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழக்கோரி வழக்கு 2018ம் வருடத்திற்கு பின்னர் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவியை பிரிந்த பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் தாக்கல் செய்தேன்.

3. 1ம் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் தான் நான் அவருடன் சேர்ந்து வாழக்கோரி மனுதாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சேர்ந்து வாழக்கோரி 1ம் மனுதாரர் முகவரி என நான் தாக்கல் செய்த மனுவில் எந்த முகவரியை குறிப்பிட்டேன் என்றால் மாடக்கோட்டை முகவரியை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்தேன். நான் சொன்னது போல் எந்தவொரு வழக்கும் 1ம் மனுதாரர் மீது தாக்கல் செய்யவில்லை என்றும்,, பொய்யாக 1ம் மனுதாரர் முகவரி குறிப்பிட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

4. 1ம் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ சொல்லி உத்தரவு பிறப்பித்து எவ்வளவு காலம் ஆகிவுள்ளது என்றால் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. நான் மேற்படி இரண்டு ஆண்டுகளில் 1ம மனுதாரருடன் சேர்ந்து

வாழ எந்தவொரு முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் அவர்களை கூப்பிட்டேன் ஆனால் அவர் வரவில்லை. கடந்த 31.03.2022ம் தேதி இந்த வழக்கை 1ம் மனுதாரர் தாக்கல் செய்த பின்னர் தான் நான் கடந்த 15.06.2022ம் தேதி 1ம் மனுதாரரை என்னுடன் சேர்ந்து வாழக்கோரி வழக்கு தொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அதற்கு முன்னரே தாக்கல் செய்துவிட்டேன்.

5. நான் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்தில் 1ம் மனுதாரரை சேர்ந்து வாழக்கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரர்களை 2018ம் வருடமே கோயம்புத்தூரைவிட்டு விரட்டிவிட்டு இன்றுவரை மனுதாரர்களுக்கு எந்தவொரு ஜீவனாம்சமும் கொடுக்கவில்லை என்றும், 2 மற்றும் 3ம் மனுதாரர்களுக்கு இதுவரைக்கு கல்வி செலவு உள்ளிட்ட எந்தவொரு செலவும் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் மனுதாரர் அம்மா மனுதாரர்களை பார்க்கவிடவில்லை.

6. நான் வழக்கிற்காக மனுதாரர்களை வந்து பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், எனது தந்தை மனுதாரர்களை பார்க்கவந்ததால் அவரை நான் கடுமையாக தாக்கியதால் அவர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.